புதுக்கோட்டை மாவட்டம்/ வட்டாரம், வடவாளம் அரசு மேல்நிலைப்பள்ளியில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் "நலம் காக்கும் ஸ்டாலின்" உயர்மருத்துவ சேவை முகாமினை, இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி 20.12.2025 அன்று துவக்கி வைத்து, கர்ப்பிணிப் பெண்களுக்கு ஊட்டச்சத்துப் பெட்டகங்களை வழங்கினார்.

சேலம் மத்திய மாவட்டம் கன்னங்குறிச்சி அரசு மேல்நிலைப் பள்ளி மாணவி பிரியதர்ஷிணி இந்தூரில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டியில் தங்கப் பதக்கம் வென்றதையொட்டி அமைச்சர் இரா.இராஜேந்திரன் மாணவிக்கு பாராட்டுத் தெரிவித்தார். உடன் சேலம் வடக்கு ஒன்றிய செயலாளர் ரெயின்போ நடராஜன், பொதுக்குழு உறுப்பினர் பூபதி பேரூர் கழக செயலாளர் தமிழரசன், தம்பிதுரை, சீனிவாசன், இளவரசன், சுபாஷ் ஆகியோர் இருந்தனர்.

திருவெறும்பூர், துவாக்குடி, ராவுத்தான்பட்டியில்

எந்திரவியல் ஆய்வக அறை - எட்டு வகுப்பறைகள்!

அமைச்சர்கள் கே.என்.நேரு – அன்பில் மகேஸ் பொய்யாமொழி திறந்து வைத்தனர்!

திருவெறும்பூர், டிச. 25–

திருவெறும்பூர் அருகே உள்ள துவாக்குடி ராவுத்தான்பட்டி ரூபாய் 1.32 கோடி மதிப்பீட்டில் எந்திரவியல் ஆய்வக அறை உட்பட எட்டு வகுப்பறைகள் கட்டிடத்தை தமிழக நகர்ப்புற வளர்ச்சி துறை அமைச்சர் கே என் நேரு தமிழக பள்ளிகளுத்துறை அமைச்சர் முனைவர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆகியோர் திறந்து வைத்தனர். தமிழக நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கே.என்.நேரு மற்றும் தமிழக பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் முனைவர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆகியோர் 1.32 லட்சம் மதிப்பீடு இயந்திரவியல் ஆய்வக அரை உட்பட எட்டு வகுப்பறைகளை திறந்து வைத்தனர்

அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமை வகித்து பேசிய தாவது

இந்த பள்ளிக்கு ஒரு கோடியே 32 லட்சம் மதிப்பீட்டில் எந்திரவியல் ஆய்வக அறையுடன் 8 வகுப்பறைகள் கட்டப்பட்டு திறக்கப்படுள்ளது

ஒட்டுமொத்த தமிழ்நாட்டிலே இன்றைக்கு 15 மாவட்டங்களில் இது போன்ற ரோபோடிக்ஸ் லேப் திறக்கின்ற நிகழ்வு அதை திருவெறும்பூர் தொகுதியில் துவாக்குடி நகராட்சியில் இன்றைக்கு நம் முடையநகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் திறந்து வைத்துள்ளார் சட்டமன்றத்தில் மானிய கோரிக்கையின் போது தமிழகத்தில் உள்ள 38 மாவட்டத்திலும் இது போன்ற இயந்திரவியல் ஆய்வாகும் திறப்பதற்கு 15.43 கோடி ஒதுக்கப்பட்டதாகவும் முதல் கட்டமாக 15 மாவட்டங்களில் 6 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு இன்று இயந்திரவியல் ஆய்வகம் திறக்கப்பட்டுள்ளது.

திருவெறும்பூர் மக்களின் நீண்ட நாள் கோரிக்கையாக உள்ள திருவெறும்பூர் பஸ் ஸ்டாண்ட் அமைத்து தரவேண்டும் என நகர்ப்புற வளர்ச்சி துறை அமைச்சர் அவர்ளிடம் கோரிக்கை வைத்ததற்கு ரூபாய் 6 கோடி ரூபாய் ஒதுக்கி கொடுத்து விரைவில் பணி தொடங்க உள்ளது அதற்கு நன்றி தெரிவித்துக் கொள்வதாகவும் .

இன்றைக்கு இருக்கும் காலகட்டத்தில் தம் எஸ் டி இ எம் என்று இருந்ததை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்லும் விதமாக தற்பொழுது எஸ் டி இ ஏ எம் ஆக வந்துவிட்டது டெக்னாலஜி வந்துவிட்டது.

கிராமப்புறங்களில் உள்ள மாணவர்கள் நகர்ப்புறத்தில் உள்ள மாணவர்களுக்கு இணையாக கல்வி கற்பதுடன் அறிவையும் பெற வேண்டும் கிராமப்புற மாணவர்களுக்கு இருந்து ஒரு அப்துல் கலாமை உருவாக்க முடியாத என தமிழக முதல்வரின் கனவை நினைவாக்கும் விதமாக தற்பொழுது எந்திரவியல் ஆய்வகங்கள் திறக்கப்பட்டுள்ளது.

ட்ரோன் எப்படி பறக்கிறது அதில் என்ன டெக்னாலஜி உள்ளது அது எதற்கெல்லாம் எப்படி பயன்படுத்தப்படுகிறது என்பதெல்லாம்இதன் மூலம் மாணவர்கள் தெரிந்து கொள்ளலாம்

ஏ ஐ தொழில் நுட்பத்தில்.ஒரு போட்டோவில் எது உண்மை எது பொய் என்று தெரியாமல் போய் விட்டது.

அதற்கு ஏற்ப இன்று ஜென ரேட்டர் வாட்டர் பார்க் என்பது உருவாக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் போட்டோ வீடியோக்கள் உண்மையானதா போலியானதா என்பதை கண்டறிய முடியும்

முன்பெல்லாம் சூரியனிடம் போக முடியாது அது சுற்றி எரித்து விடும் என்பார்கள் அமெரிக்காநாசாவை சேர்ந்த ஸ்பார்க்ர் போல மூலம் அதனிடமும் போய் சென்று விட்டனர் இதை செய்தவர்கள் மாணவர்களாக இருந்து விஞ்ஞானியாக ஆனவர்கள் தான்,

அதை போல் நீங்களும் சிறந்து வருவீர்கள் இந்த லேபை நீங்கள் பயன்படுத்திக் கொள்ளுங்கள் பேராசிரியரின் 103 வது பிறந்தநாள் விழாவில் இங்கு நாங்கள் இருவரும் இதை தொடங்கி வைத்துள்ளது.

இங்குதான் இருக்கும்இது நாங்கள் அவருக்கு செலுத்தும் மரியாதையாக இருக்கும்.

மாணவர்களின் கனவை நினைவாக்குவது எங்களது வேலை என தமிழக முதல்வர் தொடர்ந்து சொல்லிக் கொண்டுள்ளார். எனவே மாணவர்கள் அதனை பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

இங்கு கல்வி கற்கும் மாணவர்கள் திருச்சி மட்டுமல்லாது தமிழகமும் பெருமை இதற்கு விதத்தில் இருக்க வேண்டும் என மாணவர்கள் பாராட்டவதாக கூறினார்,

மாநில திட்ட இயக்குனர் ஆர்த்தி எந்திரவியல் ஆய்வக அரை குறித்து பேசியதாவது

விஞ்ஞான வளர்ச்சிக்கு ஏற்ப மாணவர்களுக்கு கன்டினியுள்ள வகையில் கல்வியை கற்பழிப்பதற்காக 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டு முதல் 2025 மற்றும் 2026 ஆம் ஆண்டு வரை அரசு பள்ளிகளில் 28,663 திறன்மிகு வகுப்பறைகள் 8863 உயர் தொழில்நுட்ப ஆய்வகங்கள் மற்றும் 1016 கணினி அறிவியல் ஆய்வகங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின் மூலம் அரசு பள்ளிகளில் பணி 42 லட்சம் மாணவர்கள் பயனடைந்து வருகின்றனர்.பள்ளிக்கல்வித்துறையில் மெருகேற்றும் விதமாக உலகம் முழுவதும் பேசப்படும் ஆர்டிபிசியல் இன்டெலிஜென்ஸ் ஏ ஐ செயற்கை நுண்ணறிவை மாணவர்கள் கற்றுக் கொள்வதற்கு தமிழ்நாடு அரசு ஆறு முதல் ஒன்பதாம் வகுப்பு வரை டிஎன் ஸ்பார்க் என்ற சிறப்பு பாடத்தை இதுவரை 5000 அரசு பள்ளிகளில் விரிவாக நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கிறது.

இதனை தொடர்ந்து அரசு பள்ளிகளில் ஆறு முதல் ஒன்பதாம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களிடம் செயல்முறை அடிப்படையில் கற்றறிதல் மூலம் அறிவியல் தொழில்நுட்பம் புவியியல் கணிஸ்டெம் கருத்துக்களை வலுப்படுத்த15 மாவட்டங்களில்

தலா ஒரு பள்ளி என்ற அளவில் பதினைந்து அரசு பள்ளிகளில் இயந்திரவியல் ஆய்வகங்கள் நிறுவப்பட்டுள்ளன.

இதன் மூலம் 15 அரசு பள்ளிகளில் ஆறு முதல் ஒன்பதாம் வகுப்பு வரை பயிலும் மாணவர்கள் ஸ்மார்ட் டெஸ் பின், ரோபட் , அடிப்படை மின்னியல் உள்ளிட்டவை கற்றுக் கொள்கின்றனர்.

மேலும் இப்ப பள்ளிகள் அதனை சுற்றியுள்ள இதர ஸ்போக்கள்ளிகளுக்கு இது ஹப் பொழியாக செயல்படும் இதற்கான பாடத்திட்டம் எஸ்இஆர்டி மூலம் அண்ணா யுனிவர்சிட்டி ஆராய்ச்சி ஆதரவுடன் தயாரிக்கப்பட்டுள்ளது.

ஆண்டு இறுதியில் அண்ணா பல்கலைக்கழகம் மூலம் செயல்முறை மற்றும் எழுத்து தேர்வுகள் மேற்கொள்ளப்பட்டு மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்படும்.

இந்த திட்டம் படைப்பு ஆற்றல் சிக்கல் தீர்க்கும் திறன் மற்றும் தொழில்நுட்ப நம்பிக்கையுடன் கூடிய எதிர்காலத்திற்கு பியூச்சர் ரெடி மாணவர்களை உருவாக்கும் வலுவான அடித்தளமாக அமையும். என்றார்.

நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே என் நேரு பேசியதாவது

நாட்டில் தமிழ்நாடு முன்னேறி உள்ளது தமிழ்நாடு 12% முன்னேறி இருக்கிறது. என்று சொன்னால் டிடிபி 15என்ற இரட்டை இலக்கை அடைந்துள்ளது நாட்டில் விஞ்ஞானம் வளர்ந்துள்ளது எந்த பணியையும் வேகமாக செய்யும் அதற்கு விஞ்ஞானம் உதவுகிறது தன்னிச்சைய வெளிச்சத்தை ஏற்படுத்துவதற்கும் பொருளை எடுத்து செல்வதற்கும் ரோபோட் இருக்கிறது வசதி படைத்தவர்கள் மட்டுமே கற்றுக் கொள்ள வேண்டியது.

இந்த நிலையில் தமிழக முதல்வர் தமிழக பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் கிராமப்புறம் நகர்புறத்தில் உள்ளவர்களும் கற்றுக் கொள்வது சட்டமன்றத்தில் அனுமதி பெற்று தொடங்கப்பட்டுள்ளது.

அதை திருவரம்பூர் பகுதியில் தொடங்கி வைப்பது தனக்கு மகிழ்ச்சி அளிப்பதாகவும் அவரது பணி சிறக்க வாழ்த்துவதாகவும்

பள்ளிக்கல்வித்துறை அதிகாரிகள் இந்த துறையை பள்ளி கல்வித்துறை அமைச்சரின் வழிகாட்டுதலில் சிறப்பாக செயல்படுத்தி வரும் என்று சொன்னால் அது மிகையாகாது அரசு பள்ளியில் பயின்ற மாணவர்கள் 90 வதக்கத்திற்கு மேல் விளையாட்டு துறையில் பெற்றுள்ளனர் இந்த துறை மிகவும் சிரமமான துறையாகும் ஒவ்வொரு இடத்திலும் ஒவ்வொன்று மாதிரியான பாடங்கள் செயல் நடத்தப்படும் ஆனால் எங்களுக்கு விளக்கு தண்ணீர்கழிவறை அமைக்க வேண்டும் கழிவு நீர் வெளியேற்ற வேண்டும் மழை நீர் வெளியேற்ற வேண்டும் நிலத்தடி நீரை பாதுகாக்க வேண்டும் நகர சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும் மாணவரிடம் இதை நான் எதற்காக சொல்கிறேன் என்றால் மாணவர்கள் நாங்கள் என்னென்ன செய்கிறோம் என்பதை அவர்களது பெற்றோர்களிடம் எடுத்துக் கூறவேண்டும் இதன் மூலம் தற்போதைய முதல்வர் மீண்டும் ஒருமுறை முதல்வராவதற்கு அது வழிவகுக்கும் சிலர் செய்யாததை எல்லாம் செய்ததாக சொல்லி யார் யாரோ பரப்பி வருகின்றனர்

துவாக்குடி நகராட்சிபேரூராட்சியாக இருந்து தரம் உயர்த்தப்பட்டது ஆகும் இங்கு நகராட்சியை கட்டுவதற்கு இடம் இல்லாமல் இருந்தது அதற்கு இடம் வாங்கப்பட்டது கோவில் கட்டுவதற்கும் இடம் வாங்கப்பட்டது பெல் நிறுவனம் 2000 ஏக்கர் மேல் நமது இடத்தை வைத்துள்ளது

திருச்சி மாவட்டத்தில் பள்ளி கட்டுரை 2 கோடி ரூபாய் ஒதுக்கி கொடுத்ததாக கூறினார்கள் இல்லைராசி நிர்வாக துறை சார்பில் 23 கோடி ரூபாய் செலவில் இரண்டு கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளது என்றும் இதில் ஒரு பள்ளிகள் 2000 இன்னொன்று ஆயிரத்து 500 பேர் படிக்கிறார்கள் என்றும் இங்கு படிக்கும் மாணவர்கள் சரளமாக ஆங்கில பேசுகின்றனர் இவர்கள் இந்த பள்ளிகளில் மாணவர்கள் சேர்க்கைக்கு எந்த வித சுபாரிசு எடுபடாது அவர்களுக்கு என தேர்வு வைத்து தான் மாணவர்களை சேர்க்கின்றனர்.

சென்னையில் நகராட்சி மாநகராட்சி பள்ளி என்று சொன்னால் மட்டமாக நினைத்தது போல் தற்பொழுது ஒரு லட்சத்து 15 ஆயிரம் மாணவர்கள்கல்வி பயின்று வருகின்றனர்

பள்ளியின் அனைத்து கட்டிடங்களும் தனியார் பள்ளி கட்டிடங்கள் போல் உள்ளது

தமிழ்நாட்டில் 138 நகராட்சிகள் 490 பேரூராட்சிகள் 25 மாநகராட்சிகள் உள்ளன.

வருடம் ஒருவருக்கு 10 பைசா நிதி கல்விக்காக ஒதுக்க வேண்டும் அப்படி இருந்தால் பள்ளிக்கு கல்விக்கு தேவையான நிதியை வழங்க முடியும் அது போல் வழங்கி வருகிறோம் துவா குடி நகராட்சிக்கு மட்டும் 60 கோடி ரூபாய் நிதி கொடுத்துள்ளோம்

துவாக்குடி நகராட்சி பகுதியில் மாதிரி பள்ளியைதமிழக முதல்வர் திறந்து வைத்தார் நகராட்சி பள்ளி சிறப்பாக உள்ளது மாணவர்கள் வெற்றி பெற வேண்டும் அதற்கு அடித்தளமாக இது உள்ளது 1996 மற்றும் 2001 இல் முதல்வராக நமக்கு நாமே திட்டத்தை திருவெறும்பூரில் தொடங்கி வைத்தோம் தற்பொழுது துணை முதல்வர் விளையாட்டு துறையை இந்த பகுதியில் தொடங்கி வைத்துள்ளார் தமிழக முதல்வரும் துறை அமைச்சர்களும் எவ்வளவு சிறப்பாக நடந்து கொள்கிறார்கள் என்பதை மாணவச் செல்வங்கள் நீங்கள் அறிந்து கொள்ள வேண்டும் என்றார்.

இந்த விழாவில் அரசு அலுவலர்களும் அரசியல் கட்சியை பிரமுகர்களும் கலந்து கொண்டனர்.

முன்னதாக பள்ளிக்கல்வி இயக்குனர் கண்ணப்பன்வரவேற்றார்.

துவாக்குடி நகராட்சி தலைவர் காயாம்பு நன்றி கூறினார் .

துணை முதல்வர் பிறந்த நாள் விழா!

பொள்ளாச்சியில் அகல்யா அறக்கட்டளை - கழக சட்ட திட்டத் திருத்தக் குழு சார்பில் இலவச மருத்துவ முகாம்!

தென்றல் செல்வராஜ் ஏற்பாட்டில் நிகழ்ச்சி!

கோவை, டிச, 25-

தமிழக துணை முதல்வர், கழக இளைஞரணி செயலாளர், இளந்தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு அகல்யா அறக்கட்டளை கண் மருத்துவமனை , அகல்யா ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மற்றும் கழக சட்டத்திட்ட திருத்தக் குழு இணைந்து நடத்தும் இலவச மருத்துவ முகாம் ஆயுர்வேத சிகிச்சை மற்றும் கண் பரிசோதனை முகாம்

கழக சட்டத் திட்ட திருத்தக் குழு உறுப்பினர் தென்றல் செல்வராஜ் ஏற்பாட்டில் நடைபெற்றது.

இம்முகாமை மாவட்ட கழக செயலாளர் தளபதி முருகேசன் துவக்கி வைத்தார்.

நகர செயலாளர்கள் இரா.நவநீதகிருஷ்ணன் , எம்.அமுதபாரதி, தலைவர் ந.சியாமளா, நகராட்சி துணைத் தலைவர் எஸ். கௌதமன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் மணிமாறன் தென்றல் ஆகியோர் முன்னிலையில், நகர மன்ற உறுப்பினர்கள் மணிமாலா தென்றல் வரவேற்புரையில் நடைபெற்றது.

நகர துணைச் செயலாளர் பாத்திமா அக்பர், நகர மன்ற உறுப்பினர்கள் ஸ்வீட் நாகராஜ், சு.தங்கவேல், துரைபாய், வட்ட செயலாளர்கள் ஜெகதீசன், த.சரவணன், மாவட்ட சிறுபான்மையினர் அணி துணை அமைப்பாளர் சாணவாஸ் , நகர சிறுபான்மையினர் அணி அமைப்பாளர் சிட்டி டிவி உசைன், வட்ட பிரதிநிதிகள் மணிகண்டன், பாலன், அங்குமணி, விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் சரவணகுமார் , பேங் விஜயகுமார் , நகர இளைஞரணி அமைப்பாளர் யுவராஜ், நகர இளைஞரணி துணை அமைப்பாளர்கள் ஈஸ்வரன், நவீன், அபூபக்கர் சித்திக், சபரி , தகவல் தொழில் நுட்ப அணி விக்னேஷ் பிரபு, முன்னாள் நகர இளைஞரணி துணை அமைப்பாளர் பைக் பாபு, நகர சார்பு அணி துணை அமைப்பாளர்கள் கு.மகேந்திரன் , தாஸ் பிரபு, ஜீவா , சக்திவேல், கணேஷ், லேத் சுப்ர மணியம், லேத் செல்வராஜ், சபரி துரை, சுதீஸ்ராஜ் , சபரி பாபு, ஹாரி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

அரியலூர் மாவட்டம், குன்னம் சட்டமன்றத் தொகுதி, செந்துறை மாதிரி அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டல் மையம், தமிழ்நாடு மாநில ஊரக / நகர்புற வாழ்வாதார இயக்கம் இணைந்து நடத்தும் மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமினை போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவக்கி வைத்து, தனியார்துறை வேலைவாய்ப்பிற்கான பணியமர்வு ஆணையினை வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் பொ.இரத்தினசாமி மற்றும் பலர் உள்ளனர்.

தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் 42வது ஆண்டு பொதுக்கூட்டம் மற்றும் 187வது இயக்குநர்கள் குழுக் கூட்டம் 22.12.2025 அன்று டாப்செட்கோ அலுவலகத்தில் வாரியத் தலலவர் துறைமுகம் காஜா தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மேலாண்மை இயக்குநர் முலைவர் சீ.சுரேஷ்குமார் மற்றும் டாப்செட்கோ இயக்குநர்கள் கலந்து கொண்டனர்.